# தமிழ் உலகின் முதன்மொழியாக கடவுக

இவ்வுலகில் நேர்மையான ஓர் அரங்கில் எம்மொழி தலை சிறந்தது என்று ஓர் ஆய்வு

செய்தால் நிச்சயமாக ஆங்கிலம் முதலிடம் பெறாது என்பது யாவரும் அறிந்த ஒன்று.

உதாரணமாக ஆங்கிலத்தில் சந்த நயம் என்பது அறவே இல்லை என்பது நமக்கெல்லாம்

தெரிந்த ஒன்று. ஆனாலும், ஆங்கிலம் இன்று உலகின் முதன் மொழி போன்ற ஒரு பொய்த்

தோற்றம் ஆசியா, மற்றும் சில ஆங்கிலேயன் ஆண்ட பூமியில் நிலவி வருகிறது. ஆங்கிலத்தில்

பேசுவது நாகரிகமாகவும் அவரவர் தாய் மொழியில் பேசுவது கேவலம் போன்றும் ஒரு மாயத்

திரையை வணிகர்கள், திரை உலகினர், மற்றும் பல முன்னோடிகள் நம்மை தவறான வழியில்

நடத்திச் சென்று செல்கின்றனர். பெற்றோர்கள் அறியாமையின் தாண்டவத்தால், தங்கள் குழந்தைகள்

ஆங்கிலத்தில் பேசுவதை பெருமையாகக் கருதுகின்றனர். ஆங்கிலம் கற்காதே என்று நான்

கூறவில்லை. ஆங்கிலமும், சீனமும், மற்ற பிற மொழிகளும் நமக்கு அடிமையாக இருக்க வேண்டுமே

தவிர, ஒரு போதும் நாம் அதற்கு அடிமயையாகக் கூடாது என்பதே சரி.

ஆங்கிலம் ஏன் உலகில் பரவியது என்று ஆராய்ந்தால், அதற்கு அம் மொழிக்குப்

பின்னால் இருக்கும் **மக்களே** காரணம் என்பது புரியும். அவர்களின் அயராத உழைப்பும், உறுதியும்

தான் காரணம். மக்கள் எப்படியோ அவர்கள் மொழியும் அப்படியே.

இதனால் தான் நம் முன்னோர்கள் (300 – 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள்)

இவ்வுலகைப் பற்றி நிறைய உண்மைகளைக் கண்டறிந்தும், நம்முடைய உட்பூசல்களாலும்,

கவனக்

குறைவுகளாலும், தெருவில் கூறப்படும் ”மயிரே போச்சு” என்ற அஜாக்கிரதையாலும் இன்று

அரிய பல உண்மைகளை இழந்து தவிக்கிறோம். ஓரளவு தெரிந்த உண்மைகளைக் கூறினாலும்

உலக அரங்கில் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகத் தான் இருக்கும். வளர்ச்சியுற்ற

நாடுகள் வளரும் நாடுகள் கூறுவதை ஒரு போதும் கேட்கப் போவதுமில்லை. இதை

உருவகிக்க வேண்டும் என்றால், கூரை விட்டில் இருப்பவன் கூறுவதை மாடி விட்டில் இருப்பவன்

ஒரு போதும் கேட்க மாட்டான். ஒரு சாதாரண மனிதன் தெருவிற்கு வந்து பெருக்கினால்

”உலகம்” அவனைப் பார்க்காது. அதுவே, ஒரு முதல்வன் (நாட்டின் முதல்வனோ, செல்வந்தனோ)

பெருக்கினால் ”உலகம்” பேசும் பேச்சைப் பார்க்க வேண்டுமே ! எனவே உலக அரங்கில் தகுதி

பெறுவதே நம் முதல் இலக்காக இருக்க வேண்டும்.

ஒரு நாள் இரவில் நாம் நினைத்தவுடன் இவ்வுலகை மாற்ற முடியாது. அதற்கு பலரும்

திறமையானவர்களும் உழைக்க வேண்டும். அவர்களையெல்லாம் ஊக்குவிக்கவும் செயல் படுத்தவும்

உறுதியான தலைவர் ஒருவர் வேண்டும். மக்களே... நீங்கள் தான் தமிழ். நீங்கள் தான் நம் நாடு.

உங்கள் உழைப்பில் தான் நம் உயர்வு இருக்கிறது. கடினமாக உழைக்க ஒருபோதும்

தயங்காதீர்கள். நம் உயர்வுக்கு வழி வகுக்கும் ஒவ்வொரு செயலையும் கண்டறிந்து திறம்பட

பணியாற்றி வெற்றிக்கு இன்று வித்திடுங்கள். அப்போது தான் இன்னும் சில பத்தாண்டுகளில்

”நம்” உலகை உருவாக்க முடியும்.

அகத்தியன்.
(மீனாக்குமார் வைகுண்டம்)

(Meena Kumar Vaikundam)